நாள்: 23.04.2020

பத்திரிக்கை செய்தி

கொரோனா தொற்று நோய் பரவலை தடுக்கும் பொருட்டு தமிழக அரசினால் பல்வேறு பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இந்நிலையில் 25.04.2020 முதல் ரமலான் நோன்பு கடைபிடித்தல் தொடங்க உள்ளதால் நாமக்கல் மாவட்டத்தில் உள்ள ஜமாத் நிர்வாகிகளுடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கா.மெகராஜ்.இ.ஆ.ப., அவர்கள் மற்றும் காவல் கண்காணிப்பாளர் திரு.அர.அருளரசு.இ.கா.ப., அவர்கள் ஆகியோரால் ஆலோசனைக் கூட்டம் நடத்தப்பட்டது. கொரோனா நோய்த்தொற்று பரவுவதை தடுக்க சமூக இடைவெளி கடைபிடிக்க வேண்டியது அவசியம் என்பதால் ரமலான் நோன்பு காலத்தில் பள்ளிவாசல்களில் கூட்டுத்தொழுகை நடத்தாமலும், நோன்பு திறக்கும் பொது நிகழ்ச்சிகள் நடத்தாமலும் அவரவர் தங்களது வீடுகளிலேயே தொழுகை செய்து கொள்ள வேண்டும் என அனைவருக்கும் தெரிவிக்க ஜமாத் நிர்வாகிகளை இக்கூட்டத்தில் கேட்டுக் கொள்ளப்பட்டது.

**ஓம்/-கா.மெகராஜ் இ.ஆ.ப,**
**மாவட்ட ஆட்சித்தலைவர்,**
**நாமக்கல் மாவட்டம்.**